முருகப்பெருமான் துணை

**மகான் புகழ்த்துணை நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**07.11.2023**, செவ்வாய்கிழமை

1. மாதரும ராஜனே அரங்கா
மறைபோற்றும் ஞான தேசிகா
ஆதரவாய் உன் சன்மார்க்கத்தை
அகிலமே ஏற்று வருக
2. வருகவே ஞானலோகம் ஆகுமெனக்கூறி
வழங்குவேன் அறிவுரை ஆசி
பெருமைபட சோபகிருது துலை திங்கள்
புகலுவேன் மூவேழு திகதி குசன் வாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 21 ம் நாள், 07.11.2023, செவ்வாய்கிழமை)
3. வாரமதில் புகழ்த்துணை நாயனாரும்
வழங்குவேன் உலக நலம்பெற
சோரமின்றி நல்வாழ்வு காண
சுத்தநெறி காட்டும் அரங்கன்
4. அரங்கன் உண்மை வழிதனை
அகிலத்தார் ஏற்று சரணடைய
வரங்களாக தரும் ஞான தீட்சை
வள்ளல் அரங்கனிடம் பெற்று
5. பெற்றுமே ஞானிகள் பூசை
பேதமற நாளும் செய்துவர
ஆற்றல்பலம் ஞானிகள் வழி
அழியாமையாக வந்து சேரும்
6. சேரவே உலகை மாற்றவல்ல
சித்திமிகு அன்னதான சேவை
அறமாக அரங்கன் நடத்திவர
அதன்வழி சேவை வளர்க்க

7. வளர்க்கவே பல்வேறு கிளைகள்
வையகம் எங்கிலும் துவக்கி
தளர்விலா தருமம் வளர்த்திட
தருமலோகமாக தரணியே மாறி
8. மாறுதலாகும் ஞானவான் தருமவான் என
மக்களுள் மேல்நிலை பெருகியே
ஆறுமுகப் பெருமான் வழிபாடு உருவாகி
அகிலத்தில் அமைதி நிறைவு காணும்
9. காணவே ஞானப்படைகள் பெருக
கட்டமைப்பு ஆன்மீக அரசியல்
ஞானக்களமாக மாறி இனிதே
ஞானத்தலைமை உருவாகும்
10. உருவாகும் ஞானிகள் ஆட்சி
உயர்வான ஞான ஆட்சி கண்டு
குருவரங்கன் அவதார நோக்கமாக
குவலயம் பாதுகாப்பு காண்கும்
11. காண்கவே ஓங்காரக் குடில் நோக்கி
கலியுகமக்கள் படையெடுக்க
ஆன்மீக ஞான அரசியல் களம்
அமைந்து ஞான ஆட்சி அமையும்
அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–